<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>DVC. No.16/2026</u>

**<u>02.06.2026</u>**

**திருமதி. சரிதா (எ) செல்லம்மாள், க/பெ. சின்னத்தம்பி (எ) சிவக்குமார்**

<u>PW : </u>1

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆரியோ வேலைப்பாடு தையல் கலையில் பயிற்சி பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதைக் கொண்டு சுய தொழில் செய்கிறேனா என்றால் கற்றுக்கொடுத்தவர் வீட்டில் வேலை செய்து வருகிறேன். ஆரியோ வேலையை நான் மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் பயிற்சி வகுப்பு எடுக்கிறேனா என்றால் கணவருடன் சேர்ந்து வாழ்ந்த போது எடுத்தேன் தற்போது இல்லை. எனது கணவர் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளார். 12 ம் வகுப்பு கல்வி தகுதியின் அடிப்படையில் எனது கணவர் ஒப்பந்த தொழிலாளராக வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். அதற்காக மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வருகிறார் என்றால் இல்லை.

என்னையும் என் குழந்தையும் வைத்து குடும்பம் நடத்திய போது வருமான பற்றாக்குறை இருந்தது என்றால் சரிதான். அதனால் 4 அல்லது 5 சுய உதவிக்குழுக்களில் கடன் வாங்கினேன் என்றால் சரிதான். கடன் வாங்குவதற்கு முன்பு என் கணவரிடம் சொல்லிவிட்டு வாங்க சொன்னார் என்றால் கணவர் சொல்லித்தான் கடன் வாங்கினேன். நான் கடன் வாங்கிய விவரமே என் கணவருக்கு தெரியாது என்றாலும், நான் தற்போது சொன்னதால் தான் அவருக்கு தெரிய வந்தது என்றாலும் சரியல்ல. என் கணவருடன் குடுத்தனம் நடத்தியபோது என்னுடைய அம்மா என் பாட்டியும் சேர்ந்து குடுத்தனம் செய்தோம் என்றால் சரிதான்.

அப்போது என் கணவர் தான் வீட்டுக்கு தேவையான அனைத்து தேவைகளையும் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு மாமனார், மாமியார் இல்லை என்றால் சரிதான். திருமணத்தின் போது இருந்தார்கள். எனது மகள் என்ன படிக்கிறார் என்றால் 3 ம் வகுப்பிலிருந்து 4 ம் வகுப்புக்கு செல்கிறாள். இதுவரை பிள்ளைக்கான பள்ளி செலவு

அழைத்து செல்வதற்கான பயணச்செலவு அனைத்தையும் என் கணவர் தான் பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல. துவக்கத்தில் நான் ரூ.5,000/- பள்ளி கட்டணம் கட்டினேன். பின்னிட்ட செலவுகளை எதிர்மனுதாரர் செய்து வந்தார். 15 பவுன் நகை போட்டதாக நான் சொல்வது தவறு என்றால் திருமணத்தின்போது 7 பவுன் போட்டார்கள் பின்னிட்டு சிறிதுசிறிதாக சேர்த்து மொத்தம் 15 பவுன் போட்டுள்ளார்கள்.

மனுவில் திருமணத்தின்போது 15 பவுன் போட்டுள்ளார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. திருமணத்திற்கு பின்னிட்டு மொத்தமாக 15 பவுன் செய்தார்கள் என்று நான் சொல்வது பொய் என்றாலும் அதனால் முன்னுக்குபின் முரணாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அபிராமி சுந்தரி என்ற பெண்மணியுடன் எனது கணவர் பழகுவதாக நான் சந்தேகப்பட்டேன் என்றால் அவருக்கு கணவர் இல்லை என்பதால் சந்தேகப்பட்டேன். அபிராமி சுந்தரி என்ற பெண்ணுக்கு சுமார் 56 வயது இருக்கும் என்றால் சரிதான். அபிராமி சுந்தரி என் கணவருக்கு சின்னம்மா முறை என்றால் சரிதான்.

எனது கணவருக்கு அம்மா இல்லாததால் அவருக்கு இருந்த ஒரே உறவான சின்னம்மாவுடன் பழகியதை நான் தவறாக நினைத்து அவரை அடித்து வீட்டை விட்டு துரத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நேற்றுவரை என் மகளுக்கு என் கணவர் பிரியாணி வாங்கி கொடுத்து செலவு செய்துள்ளார் என்றால் இவ்வழக்கின் முந்தைய தேதியிலிருந்து தான் என் கணவர் மகளை கவனித்து வருகிறார். மகளை பொறுத்தவரை எதிர்மனுதாரர் தகப்பனராக இருந்து அனைத்து செலவுகளையும் செய்ய தயாராக இருக்கிறார் என்றால் சரிதான். எனக்கு வேண்டாம் மகளுக்கு செய்தால் போதும் நான் இழந்ததை கொடுத்தால் போதும். நான் இழந்ததாக சொல்லும் எதுவும் உண்மையில் நான் இழக்கவில்லை என்றால் சரியல்ல. நான் இழந்ததாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

நான் இழந்ததாக சொல்வது நகை , அவரால் பட்ட கடன், நான் சம்பாதித்த தொகை ஆகியவை ஆகும். இது கற்பனையானது என்றாலும், அது உண்மையாக இருக்கும்பட்சத்தில் அதற்கான பரிகாரத்தை இந்த மனுவில் பெற முடியாது என்றால் சரியல்ல. நான் எவ்வித காரணமுமின்றி என் சுய விருப்பத்தின் காரணமாக எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எனது தாயும் பாட்டியும் சேர்ந்து வாழும் குடும்பத்தில் எதிர்மனுதாரரை நான் தான் அடித்து விரட்டி குடும்ப

வன்முறையில் ஈடுப்பட்டேன் என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.02 17:00:05 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்